**ஜனவரி – 16**

# TNPSC துளிகள்

- இந்தியப் பாரம்பரியம் குறித்த டிஜிட்டல் கண்காட்சியை மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை இணை அமைச்சரான பிரஹலாத் சிங் படேல் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
    - இந்த டிஜிட்டல் கண்காட்சியானது நாட்டில் நடைபெறும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது கண்காட்சியாகும்.
- இந்தியா - நார்வே வர்த்தக மற்றும் முதலீட்டு உரையாடலின் முதலாவது கூட்டமானது புது தில்லியில் நடைபெற்றது.
    - 2019 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் இந்த இரு நாடுகள் கலந்து கொள்ளும் முதலாவது கூட்டம் இதுவாகும்.

# தேசியச் செய்திகள்

## சாக்சம் (Saksham)

- மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பெட்ரோலியப் பாதுகாப்பு ஆராய்ச்சிச் சங்கமானது (Petroleum Conservation Research Association - PCRA) எரிபொருள் பாதுகாப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- PCRA என்பது பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான உத்திகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை முன்மொழியும் இந்திய அரசின் கொள்கைகளை வகுக்கும் ஒரு அமைப்பாகும்.
- எண்ணெய் வளங்களை இந்தியா சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக இந்தப் பிரச்சாரமானது நடத்தப் படுகின்றது.


# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய அபாயங்கள் அறிக்கை

- உலகப் பொருளாதார மன்றமானது தனது உலகளாவிய அபாயங்கள் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

*முதலில் உள்ள 5 உலகளாவிய அபாயங்கள்*

- காலநிலை தொடர்பான அபாயங்கள் சிறந்த வாழ்வாதாரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்த மன்றம் தெரிவித்துள்ளது.
- மற்ற அச்சுறுத்தல்களில் புவிசார் அரசியல் சூழ்நிலையும் அடங்கும்.
- பன்முகத் தன்மையிலிருந்து பின்வாங்குவது (வெளியேறுவது) உலகளாவிய அபாயங்களை எதிர்கொள்ளும் உலகின் திறனை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, தற்போதையப் பொருளாதாரத் தேக்க நிலையானது அதிகரிக்கும்.
- இந்தத் தேக்க நிலை அதிகரிப்பானது அதிகரித்து வரும் சமூகப் பிரச்சினைகள், போராட்டங்கள், அதிகரித்து வரும் ஜனரஞ்சக இயக்கங்கள் ஆகியவற்றிற்குக் கூட வழி வகுக்கும்.




- டிஜிட்டல் தொழில்நுட்பமானது அதன் பரிணாம வளர்ச்சியின் உச்சத்தில் இருந்தாலும், உலகம் முழுவதும் தொழில்நுட்பத்தின் சமமற்ற அணுகலானது அதிகரிக்கும்.
- சுகாதார அமைப்புகள் மீதான சமூக அமைப்பு, சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப அழுத்தம் ஆகியவை அதிகரித்து வருகின்றது.

## 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுகாதாரச் சவால்கள்

- உலக சுகாதார நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுகாதாரச் சவால்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலானது 13 சாத்தியமான அச்சுறுத்தல்களைக் கொண்டுள்ளது. இதில் முதன்மையான அச்சுறுத்தல் நுண்ணுயிர் எதிர்ப்பு (AMR - Anti-Microbial Resistance) மற்றும் காலநிலை நெருக்கடி ஆகியவையாகும்.
- காலநிலை மாற்றமானது ஊட்டச்சத்துக் குறைபாட்டை அதிகரித்துள்ளது. இது மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுதலைத் தூண்டுகின்றது.
- இன்ஃப்ளுயன்ஸா தொற்றுநோய் மற்றும் எச்.ஐ.வி, மலேரியா & காசநோய் போன்ற தொற்று நோய்களின் பரவுதல் ஆகியவை இந்தப் பட்டியலில் முன்னணியில் உள்ள மற்ற அச்சுறுத்தல்கள் ஆகும்.
- முதல் 13 சாத்தியமான அச்சுறுத்தல்களின் பட்டியலில் சுகாதார வசதிகளை அணுகுவதில் ஏற்படும் குறைபாடானது புதிதாக இணைந்துள்ளது.
- சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறையும் உலகளாவில் முக்கியப் பிரச்சினையாக விளங்குகின்றது.
- மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளுடன் சேர்த்து ஆரோக்கியமற்ற உணவு வகைகளும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. உணவுப் பற்றாக்குறை, ஆரோக்கியமற்ற உணவுகள் மற்றும் பாதுகாப்பற்ற உணவு ஆகியவை உலகளாவிய நோய்ச் சுமைகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு காரணமாகின்றன.

# பொருளாதாரச் செய்திகள்

## சில்லறைப் பணவீக்கம்

- மத்தியப் புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள

தகவல்களின் படி, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உணவுப் பணவீக்கமானது 14.12% ஆக அதிகரித்துள்ளது. இது 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 10.01% ஆக இருந்தது.

- நுகர்வோர் விலைக் குறியீடானது (CPI - consumer Price Index) முந்தைய (நவம்பர்) மாதத்தில் 5.54 சதவீதமாக இருந்தது. இது தற்பொழுது (டிசம்பர்) 7.35 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இந்தப் பணவீக்கமானது முக்கியமாகக் காய்கறிகளால் ஏற்பட்டுள்ளது.
- முதல் முறையாக, இந்தப் பணவீக்கமானது இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள 4% (± 2%) என்ற பணவீக்க இலக்கைக் கடந்து விட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒட்டகங்களைக் கொல்லுதல்

- ஆஸ்திரேலியாவானது வானூர்தியில் இருந்து கொண்டு பயன்படுத்தப்படும் துப்பாக்கியைப் பயன்படுத்தி 10,000 ஒட்டகங்களைக் கொல்லத் தொடங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது தெற்கு ஆஸ்திரேலிய மாநிலத்தில் உள்ள அனங்கு பிட்ஜந்த்ஜட்ஜாரா யான்குனிட்ஜட்ஜாராவில் (APY நிலம் என்றும் அழைக்கப்படும்) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.



- அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படா விட்டால், ஒட்டகத்தின் எண்ணிக்கையானது ஒவ்வொரு 9 வருடங்களுக்கும் இரட்டிப்பாகும்.
- விலங்குகளும் மிகப்பெரிய கார்பன் அடிச்சுவடைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு ஒட்டகமும் வருடத்திற்கு ஒரு டன் கார்பன் டை ஆக்ஸைடிற்குச் சமமான மீத்தேன் வாயுவை வெளியிடுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## அதிக உள்நோயாளிகள் பிரிவு சிகிச்சை

- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது நாட்டில் மிக அதிகமான உள்நோயாளிகள் பிரிவு சிகிச்சையை (Inpatient Department - IPD) பதிவு செய்துள்ளது.
- மாநில வாரியாக உள்ள இந்த அறிக்கையானது புது டெல்லியில் உள்ள தேசிய

சுகாதார அமைப்புகள் வள மையத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையின் படி, ஜம்மு காஷ்மீரில் உள்ள அனைத்துப் பெண்களும் பேறுகாலத்திற்கு முந்தைய (Antenatal Care - ANC) சிகிச்சைகளைப் பெறுகின்றனர்.
- மேலும், ஜம்மு காஷ்மீரில் உள்ள கிராமப் புறங்களில் வழங்கப்படும் 96 சதவீத IPD சிகிச்சையானது பொதுச் சுகாதார நிலையங்களால் வழங்கப்படுகின்றது. இது நாட்டின் சராசரியான 85 சதவீதத்தை விட மிக அதிகமாக உள்ளது.
- 2016 ஆம் ஆண்டில், இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியமானது பிறக்கும்போதே எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் தவிர்த்து, அனைத்து வயதினரிடையே அதிக ஆயுட்கால எதிர்பார்ப்பு கொண்டதாக கேரளாவை விஞ்சியுள்ளது.

# முக்கிய தினங்கள்

## ஆயுதப் படையைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் தினம் - ஜனவரி 14

- இத்தினமானது 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகின்றது.
- இந்திய ஆயுதப் படைகளின் முதலாவது தளபதியும் படைத் துறைப் பணியாளருமான கே.எம். கரியப்பா ஜனவரி 14 அன்று ஓய்வு பெற்றதையடுத்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14 ஆம் தேதியானது ஆயுதப் படை வீரர்களின் தினமாகக் குறிக்கப்பட்டுள்ளது.
- ஆரம்பத்தில் இந்தத் தினமானது தற்காலிகப் போர் நிறுத்த தினம் என்று அழைக்கப் பட்டது.
- நாட்டிற்கான சேவையில் இறந்த படை வீரர்களின் வீரத்தைப் பிரதிபலிக்கும் பொருட்டு இந்தத் தினமானது தனது பயணத்தை தற்காலிகப் போர் நிறுத்த தினம் என்று தொடங்கியது.
- நினைவு தினம் போலல்லாமல், தற்காலிகப் போர் நிறுத்த தினத்தில், உலகமானது போரின் ஒரு பகுதியாக இருந்த வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு மரியாதை செலுத்துகின்றது.

### *இத்தினம் பற்றி*

- உலகெங்கிலும் நவம்பர் 11 ஆம் தேதியன்று தற்காலிகப் போர் நிறுத்த தினமானது கொண்டாடப் படுகின்றது.
- இது முதலாம் உலகப் போரின் போது நட்பு நாடுகளுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குறிக்கும் வகையில் நவம்பர் 11 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- முதலாவது தற்காலிகப் போர் நிறுத்த தினமானது முதலாம் உலகப் போர் முடிவடைந்ததின் ஆண்டு நிறைவைக் குறிப்பதற்காகவும் முதலாம் உலகப் போரின் ஒரு பகுதியாக இருந்த துணிச்சலான வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காகவும் 1919 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி அன்று கொண்டாடப்பட்டது.
- இருப்பினும், 1926 ஆம் ஆண்டில் காங்கிரசால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் இந்தத் தினமானது முதன்முதலில் இந்தியாவில் அனுசரிக்கப்பட்டது.

## இந்திய வானிலை மையத்தின் நிறுவன தினம் - ஜனவரி 15

- மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள IMD (Indian Meteorological Department - இந்திய வானிலை மையம்) ஆனது தனது 145வது நிறுவன தினத்தை அனுசரித்தது.
- இது வானிலை முன்னறிவிப்புகள், வானிலை சார்ந்த கண்காணிப்புகள் மற்றும் நில

அதிர்வு சார்ந்த கண்காணிப்புகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் தலைமை நிறுவனமாகும்.

- IMDயின் தலைமையகமானது புது தில்லியில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவிலும் அண்டார்டிகாவிலும் கண்காணிப்பு நிலையத்தை அமைத்து, அதனை செயல்படுத்தி வருகின்றது.
- முக்கியமான IMD மையங்கள் குவஹாத்தி, கொல்கத்தா, சென்னை, மும்பை, புது தில்லி மற்றும் நாக்பூரில் ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன.
- உலக வானிலை அமைப்பின் (World Meteorological Organization - WMO) ஆறு பிராந்திய சிறப்பு வானிலை மையங்களில் IMD மையமும் ஒன்றாகும்.
- IMDயின் சுமார் 5 ஆய்வகங்கள் உலக வானிலை அமைப்பிடமிருந்து சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.
- இதில் சென்னை, மும்பை, புனே, திருவனந்தபுரம் மற்றும் பன்ஜிம் ஆகிய நகரங்களில் உள்ள வானிலை மையங்களும் அடங்கும்.

## 72வது இந்திய ராணுவ தினம் - ஜனவரி 15

- இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் கடைசி ராணுவத் தளபதியான சர் பிரான்சிஸ் பட்சர் என்பவரிடமிருந்து அப்பொறுப்பை ஏற்ற இந்திய ராணுவத்தின் முதலாவது தளபதியான ராணுவப் பணியாளர் கே.எம். கரியப்பா என்பவரை நினைவு கூறும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டில், இந்திய ராணுவ தகவல் தொடர்புப் படையைச் சேர்ந்த தளபதியான டானியா ஷெர்கில் தில்லியில் நடந்த இராணுவ தின அணிவகுப்பில் ஆண்கள் படையை வழிநடத்தினார்.
- பெண் ராணுவ அதிகாரி ஒருவர் இராணுவ தின அணிவகுப்பிற்கு தலைமை தாங்குவது இதுவே முதல் முறையாகும்.
- 2020 ஆம் ஆண்டின் இந்திய ராணுவ தினத்தின் கருத்துரு, 'பாதுகாப்புத் துறையில் டிஜிட்டல் மாற்றம்' என்பதாகும்.
- இந்திய இராணுவமானது 1776 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியால் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டது.
- அதன் பிறகு, இந்திய இராணுவமானது ஏறக்குறைய 125 ஆண்டுகளுக்கு முன்பு 1895 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது.
- இராணுவப் பணியாளரான கே.எம். காரியப்பா என்பவர் 1949 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று சுதந்திர இந்தியாவின் முதலாவது இந்திய ராணுவத் தலைவரானார்.
- இந்திய இராணுவத்தின் குறிக்கோள் 'சுயநலத்திற்கு முன் சேவை' என்பதாகும்.
- உலகளாவிய தீ சக்தி குறியீடு 2017ன் படி, இந்திய இராணுவமானது உலகின் நான்காவது வலிமையான இராணுவமாகக் கருதப்படுகின்றது.
- அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்தியாவை விட மிகச் சிறந்த இராணுவத்தைக் கொண்டுள்ளன.



### 31வது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2020

- 31வது சாலைப் பாதுகாப்பு வாரமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் தேதி முதல் ஜனவரி 17 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்தின் கருத்துரு, 'இளைஞர்கள் மூலம் மாற்றத்தைக் கொண்டு வருதல்' என்பதாகும்.
- சாலைப் பாதுகாப்பு வார அனுசரிப்பானது மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இது 2011 ஆம் ஆண்டு முதல் இந்திய தேசியப் பாதுகாப்பு மன்றத்தால் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- சுந்தர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேசிய சாலைப் பாதுகாப்புக் கொள்கைக்கு இந்தியாவின் மத்திய அமைச்சரவையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று ஒப்புதல் அளித்தது.
- 2020 ஆம் ஆண்டில் நாட்டின் சாலை இறப்பு விகிதத்தை 50 சதவீதமாகக் குறைக்க உறுதியளிக்கும் பிரேசிலியா பிரகடனத்தில் இந்தியா 2015 ஆம் ஆண்டில் கையொப்பமிட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★